
**டிசம்பர் – 16**

# TNPSC துளிகள்

- சாகர் டிஃபென்ஸ் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனமானது, ஆந்திரப் பிரதேசத்தின் SPSR நெல்லூர் மாவட்டத்தில் உலகின் முதல் தன்னாட்சி கடல்சார் கப்பல் கட்டும் தளத்தை அமைக்க உள்ளது.
- இந்தியக் கடற்படையானது, கொச்சியில் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டுக் கட்டமைக்கப்பட்ட ஆழ்கடலுக்கான ஆய்வு உதவிகரக் கப்பல்களின் வரிசையில் (DSC) முதல் கப்பலான DSC A20 என்ற கப்பலை படையில் இணைத்தது.
- ஆந்திரப் பிரதேச மாநிலமானது குழு II பிரிவில் முதல் பரிசைப் பெற்று, தொடர்ந்து நான்காவது ஆண்டாக தேசிய எரிசக்தி பாதுகாப்பு விருதை வென்றது.
  - மாநில எரிசக்தி திறன் குறியீட்டில் (SEEI–2025) 2024 ஆம் ஆண்டில் 87.25 புள்ளிகளில் இருந்து முன்னேறி 89.25 புள்ளிகளைப் பெற்று, எரிசக்தி திறன் வாரியம் (BEE) வழங்கிய இந்த விருதினைப் பெற்றது.
- இந்திய அரசாங்கமானது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு (CMMS) வலை தளத்தினைத் தொடங்கியுள்ளது, இது 2027 ஆம் ஆண்டு இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நிகழ்நேரத்தில் நிர்வகிக்கவும் கண்காணிக்கவும் உருவாக்கப்பட்ட ஒரு பிரத்தியேக டிஜிட்டல் தளமாகும்.
  - இது வீடு/குடும்பப் பட்டியல் & வீட்டுவசதி கணக்கெடுப்பு மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு உட்பட அனைத்துக் கட்டங்களிலும் தரவுகள் சேகரிப்பின் மையப் படுத்தப் பட்ட மேற்பார்வையைச் செயல்படுத்துகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்


## தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சி 2025




- தமிழ்நாடு மாநிலம் 16% என்ற மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) வளர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்து மற்ற மாநிலங்களை முந்தியது.
- இந்த வளர்ச்சி குறித்த புள்ளி விவரத்தை இந்திய ரிசர்வ் வங்கி (RBI) தெரிவித்துள்ளது.
- ‘இந்திய மாநிலங்கள் குறித்த புள்ளி விவரக் கையேடு, 2024-25’ என்ற அறிக்கையை ரிசர்வ் வங்கி வெளியிட்டது.

- 2021 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், தமிழ்நாட்டின் பொருளாதாரம் 10.50 லட்சம் கோடி ரூபாயாக வளர்ச்சியடைந்தது.
- தமிழ்நாட்டின் மொத்த GSDP மதிப்பு 31.19 லட்சம் கோடி ரூபாயாக உள்ளது.
- மாநிலத்தின் தனிநபர் வருமானம் ஆண்டிற்கு 1.9 லட்சம் ரூபாயைத் தாண்டியது என்பதோடு இது ஒரு பெரிய பொருளாதார மைல்கல்லைக் குறிக்கிறது.
- தற்போதைய விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2023-24 ஆம் ஆண்டில் ரூ.26.88 லட்சம் கோடியிலிருந்து 2024-25 ஆம் ஆண்டில் ரூ.31.18 லட்சம் கோடியாக அதிகரித்து உள்ளது.
- இந்த வகையில், தமிழ்நாடு மகாராஷ்டிரா மற்றும் குஜராத்தை விட மிக அதிகமாக இருந்தது.
- கடந்த மூன்று ஆண்டுகளில் இது ஒரு நிலையான மேல்நோக்கிய போக்கைத் தொடர்கிறது என்பதோடு 2021-22 மற்றும் 2022-23 மற்றும் 2023-24 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் தமிழ்நாடு 14.47 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.
- மகாராஷ்டிரா, முழுமையான அடிப்படையில் மிகப்பெரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கொண்டிருந்தாலும், தமிழ்நாட்டுடன் ஒப்பிடும் போது அது மெதுவான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.
- கர்நாடகா நிலையான இரட்டை இலக்க செயல்திறனைக் கண்டது, ஆனால் விரிவாக்க வேகத்தின் அடிப்படையில் 2024-25 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டை விட பின்தங்கி இருந்தது.
- உத்தரப் பிரதேசம் 2022-23 மற்றும் 2023-24 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் குறிப்பாக வலுவான வளர்ச்சியைப் பதிவு செய்தது, ஆனால் 2024-25 ஆம் ஆண்டில் அது மிக மிதமானது.
- தனிநபர் வருமானத்தில் தமிழ்நாடு டெல்லி, தெலுங்கானா மற்றும் கர்நாடகாவை விட நான்காவது இடத்தில் உள்ளது.
- தனிநபர் வருமானம் 2023-24 ஆம் ஆண்டில் ரூ.3,13,329 ஆக இருந்த நிலையில், 2024-25 ஆம் ஆண்டில் ரூ.3,61,619 ஆக கடுமையாக உயர்ந்துள்ளது.

## HPV தடுப்பூசி வழங்கல் திட்டம்




- தமிழ்நாடு மாநிலம் ஆனது, 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதிக்குள் மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) தடுப்பூசி திட்டத்தைத் தொடங்க உள்ளது.
- கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்ப் பாதிப்பு அதிகமாக உள்ள அரியலூர், பெரம்பலூர்,

திருவண்ணாமலை மற்றும் தர்மபுரி ஆகிய நான்கு மாவட்டங்களில் இந்தத் திட்டம் தொடங்கப் படும்.

- இந்த நான்கு மாவட்டங்களில் உள்ள 27,000 குழந்தைகளுக்கு முதல் தவணை தடுப்பூசி வழங்கப்படும்.
- ஒட்டு மொத்தமாக, 38 மாவட்டங்களில் சுமார் 3,38,000 சிறுமிகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைவார்கள்.
- இது கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுக்க 9 முதல் 14 வயது வரையிலான சிறுமிகளுக்கான திட்டமாகும்.
- மாநில அரசானது, 36 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது என்பதோடு மேலும் இத்திட்டம் மூலம் அரசு தடுப்பூசியை இலவசமாக வழங்க உள்ளது.

# தேசியச் செய்திகள்

## SHANTI மசோதா (அணுசக்தி மசோதா, 2025)




- 2025 ஆம் ஆண்டு இந்தியாவை மாற்றுவதற்கான அணுசக்தியின் முன்னேற்றத்தின் நிலையான பயன்பாடு (SHANTI) மசோதா மத்திய அமைச்சரவையால் அங்கீகரிக்கப் பட்டது.
- 1962 ஆம் ஆண்டு அணுசக்தி சட்டத்திற்குப் பிறகு இந்தியாவின் அணுசக்தித் துறையில் இது மிகப்பெரிய சீர்திருத்தமாகும்.
- இந்த மசோதாவானது, இந்தியப் பிரதமரின் கீழ் அணுசக்தித் துறையால் (DAE) அறிமுகப் படுத்தப்பட்டது.
- இது அணுசக்திச் சட்டம், 1962 மற்றும் அணு சக்தியின் சேதத்திற்கான குடிமைப் பொறுப்புச் சட்டம், 2010 (CLND சட்டம்) போன்ற பழைய சட்டங்களை மாற்றுகிறது.
- இந்த மசோதா அணுசக்தியை விரிவுபடுத்துதல், தனியார் பங்களிப்பை அனுமதித்தல் மற்றும் 2047 ஆம் ஆண்டிற்குள் 100 ஜிகாவாட் (GW) அணுசக்தி திறனை அடைவதை

நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்த மசோதா ஒரு சுயாதீன அணுசக்திப் பாதுகாப்பு ஆணையத்தையும் தெளிவான அணுசக்திப் பொறுப்பு விதிகளையும் முன்மொழிகிறது.

## பூஜ்ய பாபு கிராமின் ரோஸ்கர் யோஜனா




- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தை (MGNREGS) பூஜ்ய பாபு கிராமின் ரோஸ்கர் யோஜனா என மறுபெயரிட அரசாங்கம் திட்டமிட்டு உள்ளது.
- திருத்தப்பட்ட இந்த மசோதா ஒரு வீட்டிற்கு உத்தரவாதமளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு நாட்களை 100 நாட்களில் இருந்து 125 நாட்களாக அதிகரிக்கக்கூடும்.
- கடந்த ஐந்து ஆண்டுகளில், ஒரு வீட்டிற்கு வழங்கப்படும் சராசரி வேலைவாய்ப்பு நாட்கள் 50.35 நாட்களாகும்.
- இந்தத் திட்டம் திறன் சாரா உடல் உழைப்பைச் செய்ய விரும்பும் வயது வந்த குடும்ப உறுப்பினர்களுக்கு கூலி வேலைவாய்ப்பை வழங்குகிறது.
- முன்மொழியப்பட்ட மாற்றங்களில் திருத்தப்பட்ட நிதிப் பயன்பாடு, மாநிலங்களுக்கு இடையேயான ஈடு செய்தல்கள் மற்றும் மேம்படுத்தப்பட்டக் கண்காணிப்பு வழி முறைகள் ஆகியவை அடங்கும்.

## CoalSETU கொள்கை

- தொழில்துறைப் பயன்பாடு மற்றும் ஏற்றுமதிக்கான நிலக்கரி இணைப்புகளை ஏலம் விடுவதற்கான CoalSETU கொள்கையை அரசாங்கம் அங்கீகரித்தது.
- CoalSETU என்பது தடையற்ற, திறம் மிக்க மற்றும் வெளிப்படையான பயன்பாட்டிற்கான நிலக்கரி இணைப்பைக் குறிக்கிறது.
- இந்தக் கொள்கை 2016 ஆம் ஆண்டின் ஒழுங்குபடுத்தப்படாத துறை (NRS) இணைப்பு

ஏலக் கொள்கையில் ஒரு தனி சாளரத்தை உருவாக்குகிறது.

- இந்தச் சாளரத்தின் கீழ் பெறப்பட்ட நிலக்கரியை சொந்த நுகர்வு, நிலக்கரித் தூய்மையாக்கம் அல்லது 50% வரை ஏற்றுமதிக்கு பயன்படுத்தலாம் ஆனால் அதனை இந்தியாவில் மறு விற்பனை செய்ய முடியாது.




## பாக்ஸ் சிலிக்கா முன்னெடுப்பு




- பாக்ஸ் சிலிக்கா என்பது குறைக்கடத்தி, செயற்கை நுண்ணறிவு மற்றும் முக்கியமான

கனிம விநியோகச் சங்கிலிகளைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தும் அமெரிக்கா தலைமையிலான முன்னெடுப்பாகும்.

❖ இந்த முன்னெடுப்பானது சிலிக்கான், அருமண் தாதுக்கள், ஆற்றல், மேம்பட்ட உற்பத்தி மற்றும் கணினி உள்கட்டமைப்பை உள்ளடக்கியது.

❖ அமெரிக்க வெளியுறவுத்துறையால் வழி நடத்தப்படுகின்ற இது 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டது.

❖ இந்த குழுவில் ஜப்பான், ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், தென் கொரியா, இஸ்ரேல் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் (EU) போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட பங்குதார நாடுகள் அடங்கும்.

❖ 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாத நிலவரப்படி இந்தியாவானது பாக்ஸ் சிலிக்கா முன்னெடுப்பின் ஒரு பகுதியாக இல்லை.

## INSV கௌண்டின்யாவின் வரலாற்றுப் பயணம்




❖ INSV கௌண்டின்யாவின் பண்டையக் கடல் பாதை முன்னெடுப்பு என்பது பண்டைய கடல் வர்த்தக பாதையை மீண்டும் உருவாக்குவதற்கான ஒரு முயற்சியாகும்.

❖ INSV கௌண்டின்யா இந்தியாவிலிருந்து மஸ்கட்டுக்கு ஒரு வரலாற்றுப் பயணத்திற்குத் தயாராகி வருகிறது.

❖ இது 5 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த இந்திய வணிகக் கப்பலின் கையால் தைக்கப் பட்ட மரப் பிரதியாகும்.


❖ தேங்காய் நாரினால் ஆன கயிறு, மீன் எண்ணெய் மற்றும் இயற்கை மரக் கோந்து / பிசின் ஆகியவற்றைப் பயன்படுத்தி கட்டப்பட்டுள்ள இந்தக் கப்பலில் நவீனக் கட்டமைப்பு பொருட்கள் எதுவும் இல்லை.

❖ இது அஜந்தா குகை ஓவியங்களில் காணப்படும் கப்பல் சித்தரிப்புகளின் அடிப்படையில் கோவாவின் திவார் தீவில் கட்டமைக்கப்பட்டது.

- இந்தப் பயணமானது குஜராத்தின் போர்பந்தரிலிருந்து ஓமனின் மஸ்கட்டுக்கு, பண்டையக் கடல் வர்த்தக இணைப்புகளை மீண்டும் இணைக்கும்.

# பொருளாதாரச் செய்திகள்

## காப்பீட்டில் முழுமையான அந்நிய நேரடி முதலீடு




- இந்தியக் காப்பீட்டு நிறுவனங்களில் முழு வெளிநாட்டு உரிமையை (100% அந்நிய நேரடி முதலீடு) மத்திய அமைச்சரவை அங்கீகரித்தது.
- இந்தச் சீர்திருத்தம், பாராளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடரில் அறிமுகப் படுத்தப் பட உள்ள 2025 ஆம் ஆண்டு காப்பீட்டுச் சட்டங்கள் (திருத்தம்) மசோதாவின் ஒரு பகுதியாகும்.
- முன்மொழியப்பட்ட மாற்றங்களில் செலுத்தப்பட்ட மூலதனத் தேவைகளைக் குறைத்தல் மற்றும் காப்பீட்டாளர்களுக்கான கூட்டு உரிம முறையை அறிமுகப் படுத்துதல் ஆகியவை அடங்கும்.
- ஆயுள் காப்பீட்டுக் கழக (LIC) வாரியம் ஆனது கிளை விரிவாக்கம் மற்றும் பணியாளர்கள் ஆட்சேர்ப்பு உள்ளிட்ட மேம்பட்டச் செயல்பாட்டு அதிகாரங்களைப் பெறும்.
- இந்தச் சீர்திருத்தங்கள் காப்பீட்டுக் கொள்கை பதிவு செய்பவர்களின் பாதுகாப்பை அதிகரிப்பது, சேவைகளை மேம்படுத்துவது, போட்டியை அதிகரிப்பது மற்றும் உலகளாவிய மூலதனத்தை ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இஸ்ரோவின் ஆதித்யா- L1

- இஸ்ரோவின் ஆதித்யா-L1 கலம், சூரியப் புயல் ஆய்வு என்ற முக்கிய உலகளாவிய முயற்சியில் இணைகிறது.
- ஆதித்யா-L1 என்பது 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் PSLV C57 கலம் மூலம் விண்ணில் ஏவப்பட்ட இந்தியாவின் முதல் விண்வெளி அடிப்படையிலான சூரிய

ஆய்வகமாகும்.

- இது பூமியிலிருந்து 1.5 மில்லியன் கிமீ தொலைவில் உள்ள லாக்ராஞ்சியன் புள்ளி 1 (L1) பகுதியைச் சுற்றி ஒரு ஒளிவட்ட சுற்றுப்பாதையில் வைக்கப்பட்டுள்ளது என்பதோடு இது தொடர்ச்சியான சூரியக் கண்காணிப்பை வழங்குகிறது.
- இந்தத் திட்டத்தில் பிளாஸ்மா ஆய்வுத் தொகுப்பு உட்பட 7 கருவிகள் உள்ளன.
- சூரியப் புயல்களில் சூரியனில் இருந்து வெளியேற்றப்படும் சூடான வாயு மற்றும் காந்த ஆற்றலின் மிகப்பெரிய குமிழ்கள் ஆன சூரிய வெப்ப உமிழ்வு (CME) நிகழ்வுகள் அடங்கும்.
- 2024 ஆம் ஆண்டு மே மாதத்தின் கானனின் புயலின் போது, ஆதித்யா- L1, ஆறு அமெரிக்க செயற்கைக் கோள்களுடன் சேர்ந்து, CME காந்தப்புலக் கோடுகள் உடைந்து மீண்டும் இணைந்த காந்த மறு இணைப்பைக் கண்டறிந்தது.
- இந்த நிகழ்வு திடீர் காந்தப்புலத் திருப்புமுனையாக மாறியது என்பதோடு இது அந்தத் துகள்களை வேகப் படுத்தி, புயலைத் தீவிரப்படுத்தி, செயற்கைக்கோள்கள், தகவல் தொடர்பு, புவியிடங்காட்டிக் கருவிகள் மற்றும் மின் கட்டமைப்புகளைப் பாதித்தது.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவின் 96வது ராம்சர் ஈரநிலம்

- இராஜஸ்தானின் அல்வார் மாவட்டத்தில் உள்ள சிலிசெர் ஏரி, ராம்சர் தளமாக அறிவிக்கப் பட்டு, இந்தியாவின் 96வது சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலமாக மாறியுள்ளது.
- சத்தீஸ்கரின் பிலாஸ்பூர் மாவட்டத்தில் உள்ள கோப்ரா நீர்த்தேக்கம், சத்தீஸ்கரின் முதல் ராம்சர் தளமாக உள்ளது.
- சிலிசெர் ஏரியில் சுமார் 100க்கும் மேற்பட்ட பறவைகள் மற்றும் விலங்குகள் காணப் படுகின்றன என்பதோடு இதில் வலசை போகும் கொக்குகள் மற்றும் அங்கேயே வசிக்கும் மீன்கொத்திகள் அடங்கும்.

- சிலிசெர் ஏரி 1845 ஆம் ஆண்டில் மகாராஜா வினய் சிங்கால் ஆல்வார் நகரத்திற்கு குடிநீர் வழங்குவதற்காக கட்டமைக்கப்பட்டது.
- ராம்சர் அந்தஸ்து, வளங்காப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துதல், சுற்றுச்சூழல் சார் சுற்றுலாவை ஊக்குவித்தல் மற்றும் இந்த இரு பிராந்தியங்களிலும் ஒரு நிலையான வாழ்வாதாரத்தை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## இந்தியாவின் காட்டுத்தீ மேலாண்மைத் தீர்மானம்




- உலகளாவிய காட்டுத்தீ மேலாண்மையை வலுப்படுத்துவது குறித்த இந்தியாவின் தீர்மானம் கென்யாவின் நைரோபியில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் சபையில் (UNEA-7) ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- இந்தத் தீர்மானம் சர்வதேச ஒத்துழைப்பு, முன் எச்சரிக்கை அமைப்புகள் மற்றும்

காட்டுத்தீ மேலாண்மைக்கான ஆபத்து மதிப்பீட்டை ஊக்குவிக்கிறது.

- ❖ இது தடுப்பு, தீக்குப் பிந்தைய மீட்பு மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பின் மீளுருவாக்கம் ஆகியவற்றிற்கான பிராந்திய மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பை ஊக்குவிக்கிறது.
- ❖ தேசிய மற்றும் பிராந்திய அளவிலான காட்டுத்தீ செயல் திட்டங்களுக்கும் பலதரப்பு நிதியுதவிக்கான அணுகலுக்கும் ஆதரவு வழங்கப்படுகிறது.
- ❖ இந்தியாவில், 36% காடுகள் தீ விபத்துக்கு ஆளாகின்றன என்பதோடு அவற்றில் 4% மிகவும் அபாயகரமான மற்றும் 6% மிகவும் அபாயகரமான (ISFR 2019) நிலையில் உள்ளன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகின் அதிக வேலைப்பளு உள்ள நாடுகள்




- ❖ சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் (ILO) கூற்றுப் படி, உலகின் அதிக வேலைப்பளு உள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.
- ❖ ILO தரவுகளின்படி (2024) இந்தியத் தொழிலாளர்கள் வாரத்திற்கு சராசரியாக 45.7 மணி நேரம் வேலை செய்கிறார்கள்.
- ❖ சராசரி வேலை நேரம் குறைவாக உள்ள பெரும்பாலான வளர்ச்சியடைந்த நாடுகளை விட இது அதிகமாகும்.
- ❖ மிக நீண்ட வேலை நேரங்களுக்காக இந்திய நாடானது வங்காளதேசம், மங்கோலியா மற்றும் ஈரான் போன்ற நாடுகளின் குழுவில் இணைக்கப்பட்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## MahaCrimeOS AI தளம்

- ❖ இணையவெளிக் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்காக வேண்டி மகாராஷ்டிரா மாநில அரசால் MahaCrimeOS AI தளம் தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ இது மகாராஷ்டிரா அரசு மற்றும் மைக்ரோசாப்ட் ஆகியவற்றினால் இணைந்து உருவாக்கப் பட்டது.

- இது இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான இணைய வெளிக் குற்ற விசாரணைத் தளமாகும்.
- இயங்கலை மோசடி, அடையாளத் திருட்டு மற்றும் டிஜிட்டல் குற்றங்களை விரைவாக விசாரிக்க காவல்துறைக்கு இந்தத் தளம் உதவுகிறது.




## விளையாட்டுச் செய்திகள்

### KIUG 2025 - சண்டிகர் பல்கலைக் கழகம்




- சண்டிகர் பல்கலைக்கழகம் ஆனது தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகளாக கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டு (KIUG) போட்டிகள் பட்டத்தை வென்ற இந்தியாவின் முதல் பல்கலைக்கழகமாக மாறியது.

- இராஜஸ்தானில் நடைபெற்ற KIUG 2025 போட்டியில், இந்தப் பல்கலைக்கழகம் 42 தங்கம், 14 வெள்ளி மற்றும் 11 வெண்கலம் உட்பட மொத்தம் 67 பதக்கங்களை வென்றது.
- கேனோயிங் (படகோட்டம்) மற்றும் கயாக்கிங் ஆகிய போட்டிகள் KIUG 2025 போட்டிகளில் முதல் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டன என்பதோடு இந்தப் பிரிவுகளில் சண்டிகர் பல்கலைக்கழகம் 23 தங்கப் பதக்கங்களை வென்றது.

# முக்கிய தினங்கள்

## தேசிய எரிசக்திப் பாதுகாப்பு தினம் 2025 - டிசம்பர் 14




- இந்திய அரசின் மின்சார அமைச்சகத்தின் கீழ் உள்ள எரிசக்தித் திறன் வாரியம் (BEE) இந்த நாளை ஏற்பாடு செய்கிறது.
- எரிசக்தி வளங்களை திறம் மிக்க முறையில் பயன்படுத்துவதை ஆதரிப்பதற்காக இது 1991 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது.
- எரிசக்திப் பாதுகாப்பு மற்றும் திறம் மிக்க எரிசக்திப் பயன்பாடு குறித்த விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## அனைத்து வடிவங்களிலும் வெளிப்பாடுகளிலும் காலனித்துவத்திற்கு எதிரான சர்வதேச தினம் 2025 - டிசம்பர் 14

- காலனித்துவத்தை முடிவுக்குக் கொண்டு வந்து மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பதே இதன் நோக்கமாகும்.
- இது ஐ.நா. சபையினால் அறிவிக்கப்பட்ட பின்னர் முதன்முதலில் 2025 ஆம் ஆண்டில் இந்த தினம் அனுசரிக்கப்பட்டது.
- இந்த நாள் ஐ.நா. பொதுச் சபைத் தீர்மானத்தின் மூலம் நிறுவப்பட்டது.

- இது காலனித்துவ நாடுகள் மற்றும் மக்களுக்கு சுதந்திரம் வழங்குவது குறித்த பிரகடனம் என்று அழைக்கப் படும் தீர்மானம் 1514 (XV) (1960) என்ற தீர்மானத்தினை அடிப்படையாகக் கொண்டது.




# இதரச் செய்திகள்

## யுனெஸ்கோவின் மகத்தான கலாச்சார பாரம்பரிய அமர்வு 2025

- இந்தியா முதன்முறையாக புது டெல்லியின் செங்கோட்டையில் யுனெஸ்கோவின் அரசுகளுக்கிடையேயான குழுவின் (IGC) 20வது அமர்வை நடத்தியது.
- இந்த அமர்வு என்பது, 2003 ஆம் ஆண்டு மகத்தான கலாச்சாரப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான உடன்படிக்கையினை (ICH) இந்தியா அங்கீகரித்ததன் 20வது ஆண்டு நிறைவை ஒட்டி நடைபெற்றது.
- 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 08 முதல் 13 ஆம் தேதி வரை நடைபெற்ற இந்த அமர்வின் போது இருபத்தி நான்கு உறுப்பினர் நாடுகள் 67 உயிர்ப்பு மிக்கப் பாரம்பரியக் கூறுகளை ஆய்வு செய்தன.
- இவற்றில் அவசரப் பாதுகாப்பு தேவைப்படும் ICH பட்டியலில் 11 கூறுகள், மனித குலத்தின் ICH பட்டியலின் பிரதிநிதித்துவப் பட்டியலில் 53 கூறுகள் மற்றும் நல்ல பாதுகாப்பு நடைமுறைகளின் பதிவேட்டில் 1 திட்டம் ஆகியவை அடங்கும்.
- அவசரப் பாதுகாப்புப் பட்டியலில் இருந்து இரண்டு கூறுகள் பிரதிநிதித்துவப் பட்டியலுக்கு மாற்றப்பட்டன என்பதோடு அவற்றில் முவாசிந்திகா ஆன்மீக நடனம் (கென்யா) மற்றும் டோங் ஹோ நாட்டுப்புற படக்கட்டை அச்சிடுதல் (வியட்நாம்) ஆகியவை அடங்கும்.
- ஒன்பது பன்னாட்டுக் கூறுகள் இதில் சேர்க்கப்பட்டன என்பதோடு மேலும் பார்படாஸ், சாட், கொமொரோஸ், எல் சால்வடார், காபோன், லிபியா மற்றும் சாவோ டோம் மற்றும் பிரின்சிப் ஆகிய ஏழு நாடுகளின் கூறுகள் இதில் முதல் முறையாக சேர்க்கப் பெற்றன.
- இந்த சேர்த்தல்களுடன், ஆப்பிரிக்காவின் 13 நாடுகளைச் சேர்ந்த ஒன்பது கூறுகளுடன், 157 நாடுகளைச் சேர்ந்த 849 கலாச்சார நடைமுறைகள் தற்போது யுனெஸ்கோவின் உயிர்ப்பு மிக்க பாரம்பரியமாகப் பட்டியலிடப்பட்டுள்ளன.
- இங்கு சேர்க்கப்பட்ட குறிப்பிட்ட கூறுகள்:
  - அமெச்சூர் நாடகக் குழு - செக்கியா
  - குவார்டெட்டோ இசை - அர்ஜென்டினா

- கியூபன் சன் (இசை மற்றும் நடனம்) - கியூபா
- ஜோரோபோ - வெனிசுலா
- மெவெட் ஒயெங் இசைக் கலை - கேமரூன் மற்றும் காபோன்
- புரூசெல்ஸின் ராட் மரியோனெட் நாடகக் குழு - பெல்ஜியம்
- பிஷ்ட் நெசவு மற்றும் தொடர்புடைய நடைமுறைகள் - கத்தார், ஈராக், ஜோர்டான், ஐக்கிய அரபு அமீரகம்
- ஜாஃபா திருமணப் பாரம்பரியம் - ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கின் சில பகுதிகள்
- கிஃபாட்டா புத்தாண்டு விழா - எத்தியோப்பியா

❖ சீனா (சியாமென்) அடுத்த ICH குழு அமர்வை 2026 ஆம் ஆண்டில் நடத்த உள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★